செ.வெ.எண்: 875/2016 நாள்: 15.12.2016

# பத்திரிக்கைசெய்தி

பொது விநியோகத்திட்ட செயல்பாட்டில் காணப்படும் குறைபாடுகளை களைவதற்கும், மக்களின் குறைகளை கேட்டு உடனுக்குடன் அவற்றை நிவர்த்தி செய்வதற்கும், சிறப்பு முகாம்கள் 17.12.2016 அன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள நான்கு வட்டங்களில் கீழ்கண்டவாறு நடைபெறஉள்ளது.

அகஸ்தீஸ்வரம் வட்டத்தில் பெரியக்காடு பகுதிக்கு தர்மபுரம் ஊராட்சி அலுவலகத்திலும், தோவாளை வட்டத்தில் சிறமடம் பகுதிக்கு ஞாலம் ஊராட்சி அலுவலகத்திலும், கல்குளம் வட்டத்தில் வில்லுக்குறி பகுதிக்கு வில்லுக்குறி பேரூராட்சி அலுவலகத்திலும், விளவங்கோடு வட்டத்திற்கு கோதையாறு பகுதிக்கு கோதையாறு அங்கன்வாடி மையத்திலும் வட்டவழங்கல் அலுவலர் தலைமையில் மக்கள் குறைதீர் முகாம் 17.12.2016 அன்று காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணிவரை நடைபெறவுள்ளது.

பொதுமக்கள் பொது விநியோகத்திட்ட செயல்பாட்டில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கும், குடும்ப அட்டையில் பெயர் நீக்கல், சேர்த்தல், பெயர் திருத்தங்கள், முகவரி மாற்றம் மற்றும் குடும்ப அட்டையில் திருத்தம் செய்வதற்கும் மனுக்களை பொதுமக்கள் அளித்து தீர்வு காணலாம் எனவும் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துக் கொள்கிறார்.

ஓம்/- சஜ்ஜன்சிங் ரா சவான்
மாவட்டஆட்சித்தலைவர்,
கன்னியாகுமரிமாவட்டம்.
(இ) நாகர்கோவில்.

/உண்மைநகல் ஆணைப்படி/

மாவட்டஆட்சித்தலைவருக்காக

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலம், கன்னியாகுமரி மாவட்டம்.